


**01. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1) அம்புலி என்பதன் ஒத்த சொல்
1. சூரியன் 2. நிலா 3. நட்சத்திரம்

2) அம்புயம் என்பதன் ஒத்த சொல்
1. ஆம்பல் 2. அல்லி 3.பங்கயம்

3) வளர்தல் என்பதன் எதிர்ப்பதம்
1. தேய்தல் 2. மறைத்தல் 3. உதித்தல்

4) மலர்ச்சி என்பதன் எதிர்ப்பதம்
1. வாட்டம் 2. குளிர்ச்சி 3. புகழ்ச்சி

5) பின்வருவனவற்றில் உயிர்மெய் எழுத்துக்கள்,
1. ய், செ 2. ஆ, இ 3. நா, தா

6) தாய் அன்புடன் மகனைக் கட்டித் தழுவினாள். இங்கு எழுவாய்
1. மகன் 2. அன்பு 3. தாய்

7) பின்வருவனவற்றுள் அஃறிணைச் சொல்,
1. ஆசிரியர் 2. அம்மா 3. ஆடு

8) குரங்கினது ஆண் கடுவன் போல குதிரையின் ஆண்
1. களிறு 2. குண்டு 3. கலை

9) இளமைப் பருவத்தில் பழகும் பழக்கங்கள் இறுதிவரை தொடரும் என்ற கருத்தை தரும் பழமொழி,
1. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
2. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
3. தொட்டிற்பழக்கம் சுடுகாடு மட்டும்

10) "மெய்ஞ்ஞானம்" என்ற சொல்லில் இடம்பெற்ற மெல்லின எழுத்துக்கள்
1. ய், ம் 2. ஞ்,ம் 3. எ, ம்

**02. சேர்த்து எழுதுக.**

**1.** சூரியன் + ஒளி ……………………………………

**2.** மலர் +கரம் ……………………………………

**3.** தேன் +ஊற்று ……………………………………

**4.** மீன் +இனம் ……………………………………

**5.** கண் +நீர் ……………………………………




**03. ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக.**

1. ஆழி ……………………………
2. காற்று ……………………………
3. அன்பு ……………………………
4. இசை ……………………………
5. மதி ……………………………

**04. பன்மை வாக்கியங்களை ஒருமை வாக்கியமாக மாற்றி எழுதுக.**

**1.** பறவைகள் ஆரவாரமாக ஒலியெழுப்பிச் சென்றன.

……………………………………………………………………………

**2.** டொல்பின்கள் மனிதர்களுக்கு உதவி செய்கின்றன.

……………………………………………………………………………

**3.** நட்சத்திரக் கூட்டங்கள் வானில் மின்னின.

……………………………………………………………………………

**4.** காடுகளில் சிங்கங்கள் வேட்டையாடி உண்கின்றன.

……………………………………………………………………………

**5.** இந்து சமுத்திரத்தின், அலைகள் கரையினை மோதுகின்றன.

……………………………………………………………………………

**05. எதிர்ப்பாற் சொற்களை எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. பாலகன் | ………………….. | 6. குறவன் | …………………… |
| 2. இடையன் | …………………... | 7. வீரன் | …………………… |
| 3. சிறுவன் | ………………… | 8. இளைஞன் | …………………… |
| 4. மாமா | ………………… | 9. தம்பி | …………………… |
| 5. தாய் | ………………… | 10. அரசன் | …………………… |